அலைகடலோரம் நிலா எழும்நேரம்
அழகின் அழகாய் நான் அவளை கண்டேன் 2

மாபின் சிந்தாமணி மணிமேகலையிடையும்
மாமகள் மலரடியின் தங்கமணி சிலம்பும் 2
சீர் எளில் மயில்மங்கை செவி ஒளிர் குண்டலமும் 2
செங்காந்தள் மலர் கையின் வளை அழகும் கண்டேன் 2

அலைகடலோரம் நிலா எழும்நேரம்
அழகின் அழகாய் நான் அவளை கண்டேன் 2
அலைகடலோரம் நிலா எழும்நேரம்

எளி வஞ்சில் பேச்சில் இயல் இன்பம் தாங்கினேன்
இன்னிசை பாடினால் குயில் ஓசைவாங்கினேன் 2
அழகு சிலையவள் ஆடலும் பார்த்தேன் 2
அருகில் அவள் வந்தாள் மயங்கி  உடல் வேர்த்தேன் 2

அலைகடலோரம் நிலா எழும்நேரம்
அழகின் அழகாய் நான் அவளை கண்டேன் 2
அலைகடலோரம் நிலா எழும்நேரம்

முகம் என் முகம் பார்க்க முழு நிலா எதிர் வந்தாள்
முத்தம் இதோ என்றாள் சிவந்தாள் இதழ் தந்தாள் 2
ஆகம் புறமாய் நெஞ்சம் தழுவினாள் எனை வென்றாள்
யாரம்மா நீ என்றேன் நான் தான் தமிழ் என்றாள்

அலைகடலோரம் நிலா எழும்நேரம்
அழகின் அழகாய் நான் அவளை கண்டேன் 2
அலைகடலோரம் நிலா எழும்நேரம்